யாழ் வளாகத்தில்

# சிங்கள மாணவர் கலாட்டா!

## குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கத் தயாரென்கிறது தமிழ் மன்றம்!

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் வருகிறது என்றவுடன் தம்மை மறந்து அதை ஏற்றிப் போற்றி வரவேற்றவர்கள் பலர். ஆனால் யாழ்ப்பாணத்தில் வரப்போகும் பல்கலைக்கழக வளாகம் சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்தின் நுழைவாயிலாகவே அமையப்போகிறது என்று சுதந்திரன் தீர்க்கதரிசனத்துடன் எச்சரித்தது. நமது எச்சரிக்கையைக் கேட்டு அன்று நகைத்தோர் பலர். ஆனால் இன்று தமிழ் மாணவர்கள் தங்கள் சொந்தமண்ணான யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வளாகத்திலேயே சிங்கள ஆதிக்க வெறிக்குட்படுத்தப்பட்டு அதன் காரணமாக வளாகமே மூடப்படவேண்டிய நிலை தோன்றிவிட்டது. சிங்கள மாணவர்கள் அங்கு சென்றது படிப்பதற்காக அல்ல — தமிழர்களின் நிலத்தை —

—5-ம் பக்கம் பார்க்க

## பெரும் தலைவர் மாவோ மறைவு!

நவ சீனத்தின் தேசிய விடுதலைக்குப் போராடி நவசீனத்தை நிறுவி அதை ஒரு சமதர்மப் பூமியாக கட்டியெழுப்பிய சீனத்தின் பெருந்தலைவர் மாசேதுங் தமது 82 வயதில் 9-9-76ல் பீகிங்கில் காலமானார். மாவோவின் மறைவு குறித்து த. வி. கூ. செயல் அதிபர் நாவலர் அமிர்தலிங்கம் கூட்டணியினர் சார்பில் இரங்கல் செய்தியொன்றை விடுத்துள்ளார்.


சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆவணி 27 | நள்ளான்17 | (12-9-76) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 41


# அமிர்தலிங்கம் விடுதலை!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராக அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் அரசாங்கம் தொடர்ந்திருந்த ட்ரயல்-அற்-பார் வழக்கில், திரு. அமிர்தலிங்கம் விடுதலை செய்யப்பட்டார். வழக்கு தள்ளுபடியானது.



## "அவசரகாலப் பிரகடனம் செல்லுபடியாகாது!"

அவசரகாலப்பிரகடனம் அரசியலமைப்புக்கு அமைய பிரகடனப் படுத்தப்படவில்லையென்றும், செல்லுபடியாகாத அப்பிரகடனத்தின் கீழ் திரு. அமிர்தலிங்கத்தை விசாரிப்பதற்கு தங்களுக்கு அருகதை கிடையாதென்றும், ஆகவே அவரை விடுதலை செய்வதாகவும் மேல் நீதி மன்ற நீதிபதிகள் மூவரும்தமது தீர்ப்பில் ஏகமனதாக அறிவித்தனர்.


## மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளும் ஏகமனதாகத் தீர்ப்பு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயல் அதிபர் திரு. அமிர்தலிங்கத்துக்கு எதிராக அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் அரசாங்கம் தொடர்ந்திருந்த ட்ரயல்—அற்—பார் வழக்கில் திரு. அமிர்தலிங்கத்தின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் எழுப்பியிருந்த பூர்வாங்க ஆட்சேபனைகள் பற்றி 10-9-76 வெள்ளிக்கிழமை காலைமூன்று நீதிபதிகளும் தீர்ப்பு வழங்கினர். நீதிபதிகள் திரு. சூசா, திரு. சிவா செல்லையா, திரு. சில்வா ஆகிய மூவரும் தமது தீர்ப்பை ஏகமனதாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

காலை 9 மணிக்கு நீதிபதி திரு. சூசா தீர்ப்பின் முதல் பகுதியை வாசிக்கத்தொடங்கினர்; அடுத்து இரண்டாவது பகுதியை நீதிபதி சில்வாவும், மூன்றாவது பகுதியை நீதிபதி சிவா செல்லையாவும் வாசித்தனர்.

முதற்பகுதியில் அரசியற் சட்டம் செல்லுபடியாகா

—8-ம் பக்கம் பார்க்க



துரையப்பா கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 7-9-76ல் ஜூரர்களற்ற நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்ட ஏழு தமிழ் இளைஞர்களையும் படத்தில் காணலாம். வலமிருந்து இடமாக கலாபதி, கிருபாகரன், லோகநாதன், சிறீதரன், சந்ததியார், விஸ்வசோதி, இரத்தினம், செல்வக்குமார் ஆகியோர் சிரித்தமுகத்துடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# இலங்கைப் பிரதமர் நியூயார்க் செல்லும்போது ஐ. நா. சபை முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறலாம்!

## அணிசேரா இயக்கத்தின் தலைவியால் தமிழர் பிரச்சினையை போர்த்து மூட முடியாது!

### அட்லியின் முன்மாதிரியை அம்மையர் பின்பற்றுவாரா?

**இங்கிலாந்தில் இயங்கிவரும் தமிழ்ஈழ விடுதலைக்கு சார்பான இயக்கங்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி அண்மையில் இலங்கையில் நடைபெற்று முடிந்த அணிசேரா நாடுகளது உச்சி மாநாடு. மேற்படி மாநாடு இலங்கையில் நடைபெற்ற காரணத்தால் நடைமுறை சம்பிரதாய மரபையொட்டி இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அணிசேரா நாடுகளது தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**



தற்பொழுது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதம அமைச்சர் மட்டுமல்ல, கூட்டுச்சேரா நாடுகளது அடுத்த உச்சி மாநாடு நடைபெறுமட்டும் அணிசேரா நாடுகளது தலைவரும்கூட. அனைத்து உலகப் பிரச்சினைகள் மீதெல்லாம் திருமதி பண்டாரநாயக்கா விருப்பப்பட்டாலும் விருப்பப்படாவிட்டாலும் கண்டிப்பாகக் கருத்து வெளியிட்டாக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே, அனைத்துலக விவகாரங்களில் முந்திரிக்கொட்டை போன்று எல்லோரையும் முந்திக்கொண்டு கருத்துத் தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம், உலகப் பிரமுகராகிவிட்ட திருமதி ஸ்ரீமாவோவின் ஆட்சியின் உள்ளூர் விவகாரங்களும் இப்பொழுது முன்னரிலும் அதிகமதிகமாக உலக விவகாரங்களாகிவிட்டன — உலக அந்தஸ்தை அவர் எட்டியுள்ள காரணத்தால்!

மேற்படி நிலை இங்கிலாந்தில் இயங்கிவரும் ஈழத்தமிழர் கழகத்தினருக்கும் ஈழ விடுதலை இயக்கத்தினருக்குச் சாதகமானதே! தென்னுபிரிக்கா, ருெடேசியா, இஸ்ரேல் நாடுகளைப் பின்பற்றி இலங்கையும் முன்பு இங்குள்ள தமிழர் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்று போர்த்து மூடி வந்தது தெரிந்ததே. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானங்களை எவ்விதம் ருெடேசியா, தென்னுபிரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் கேளாக்காதினராகப் புறக்கணித்து வந்தனவோ அதுபோன்ற நிலை இலங்கையிலும் உண்டாகலாம். உலக மனச்சாட்சிக்கு விரோதமாகத் தன்போக்கில் உதாசீனமாக நடந்து கொள்ளலாமென நிலவிய ஐயப்பாடு ஓரளவு இப்போது தவிர்க்கபபட்டுள்ளது. ஆகவே, லண்டனில் உள்ள ஈழத்தமிழர் கழகம், ஈழவிடுதலை முன்னணி போன்ற இயக்கங்களுக்கும், நியூயோர்க், கனடா போன்ற இடங்களில் உள்ள தமிழ்ஈழ இயக்கங்களுக்கும் மென்மேலும் வேகம் கூட்டப்படஇருப்பதில் ஆச்சரியம் இல்லை.

கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டையொட்டி மாநாட்டில் கலந்துகொண்ட மேற்படி நாடுகளைச் சேர்ந்த ராஜாங்கத் தலைவர்களுக்கு லண்டனில் இயங்கும் ஈழத்தமிழர் கழகம், மூதறிஞர் தந்தை செல்வாவின் கையொப்பத்துடன் மகஜர்களை அனுப்பியிருந்தது தெரிந்ததே! இலங்கை அரசின் சார்பாக அமைச்சர் ஒருவர் மேற்படி மகஜரின் உள்ளடக்கத்துக்கு மறுப்பு உரைத்தார் என்ற செய்தி இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்ததே. சம்பந்தப்பட்ட மகஜர்கள் சேரவேண்டியவர்களைச் சென்றடைந்தது என்பதை உறுதி செய்வதற்குப் போதுமானது ஈழத்தமிழர் கழகத்தினர் மகஜர்களை ராஜாங்கத் தலைவர்களுக்கும், உலகப் பத்திரிகைகள், வானொலி நிலையங்களுக்கும் அனுப்பியதோடு திருப்தியடையாது உலகப் பல்கலைக்கழகங்களுக்கும் அவற்றின் பிரதிகளைப் பல்கலைக் கழகங்களது நூலகங்களில் இடம்பெறும் பொருட்டு அனுப்பியிருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையிருப்பின் அது வரவேற்கப்படத்தக்க நல்ல செய்தியே!

**தமிழ்ஈழப் பிரச்சினை உலகின் மனச்சாட்சியை உறுத்தும் பணியில் நியூயோர்க் நகரில் இயங்கும ஈழத்தமிழர் விடுதலை இயக்கங்களும் தனது ஆற்றலைப் பிரயோகிக்குமா? எதிர்வரும் ஐ. நா. தினத்தன்று நியூயோர்க் நகரிலுள்ள ஐ. நா. தலைமைச் செயலகததின் முன் ஆர்ப்பாட்டம் செய்தாவது ஈழத்தமிழர் பிரச்சினையை உலகு அறியச் செய்வதென்றே தமது முந்திய முடிவை' அவர்கள் செயல்படுததத் தலைப்படலாம். அவ்விதம் துணியப்பட்டால் அதன் பிரதிபலிப்பு கனடாவிலும் லண்டனிலும் ஒலியாது விடாது.**

கூட்டுச்சேரா மாநாட்டில் கலந்துகொண்ட ராஜாங்கத் தலைவாகளுக்கு தமிழ்ஈழம் சம்பந்தப்பட்ட மகஜர்கள் லண்டனில் இருந்து ஈழத்தமிழர் கழகத்தினரால் மாநாட்டுக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டது போன்று எதிர்வரும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளில் இயங்கும் ஈழத் தமிழர் விடுதலை இயக்கங்களால் அனுப்பப்படலாம். அதனை அடுத்து டிசம்பர் 10 ஆம் நாளில் எதிர்வரும் மனித உரிமைகள் தினத்திலும் வெளிநாடுகளில் வதியும் தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தினர் செயல்படாது விடார்.

கூட்டுச்சேரா நாடுகளது தலைவராக உலக அந்தஸ்துப் பெற்றுள்ள இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ உலக விவகாரங்களை அலசிக் கருத்துரைக்கவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் அணுகுவதற்கு முன்பாக இலங்கையின காலனித்துவத்துக்கும் சிங்கள பௌத்த இனவாதத்துக்கும் முடிவு தேடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியுள்ளது. மேற்படி நிர்ப்பந்தத்தை ஸ்ரீமாவோ தலையில் சுமத்தியதற்காகவாவது அணிசேரா மாநாட்டை இலங்கையில் நடத்தியமைக்காகத் தமிழ்ஈழம் கூட்டுச்சேரா நாடுகளுக்குக் கடமைப்பட்டுள்ளது.

அடுத்த கூட்டுச்சேரா மாநாடுகளில் லிபியா நாடு வெளியிடப்போகும் ஐந்தொகைக் கணக்கில் தனது நாட்டில் நிலவும் காலனித்துவ இனவாதப் போக்கு அம்பலப்படுத்தப்படாதிருக்க திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமிழ்ஈழ விடுதலைக்கு இப்போதே ஆவன செய்வதும், தமிழர் விடுதலை கூட்டணியுடன் தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வழங்குவதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதும் விரும்பத்தக்கது.

தேசிய இனங்களது விடுதலைக்கு உதவுவது என்றும் கூட்டுச்சேரா நாடுகளது கொள்கையை அமுல் நடத்தியவர் என்ற பெருமை திருமதி ஸ்ரீமாவோவை அப்போதுதான் சாரும். பிரிட்டிஷ் சாம்ராஜ்சியத்தைக் குலையவிடமாட்டேன் என்று வின்ஸ்ரன் சேர்ச்சில் முட்டாள்தனமாக நடந்துகொண்டதுபோல நடவாது சோசலிசத் தலைவர் ஏன் அட்லியின் பாதையில் ஸ்ரீமாவோ அடியெடுத்து உலகளாவிய தமது புகழைச் சிதைத்துவிடாது காப்பாற்றிக் கொள்வாராக. அதுவே தமிழ் மக்களின் பிரார்த்தனை.

கூட்டுச்சேரா நாடுகள் அணியில் தமிழ்ஈழம் அங்கத்துவம் பெறவும், தமிழ் ஈழமும், சிங்களமும் நேச நாடுகளாக நட்புறவை வளர்க்கவும் திருமதி ஸ்ரீமாவோவின் ராஜதந்திரம் உதவுமாக.

— திரவியம்

## சங்கப் பலகை

**நூல்:- கொன்றைப் பூக்கள்**

**ஆசிரியை: மண்டூர் அசோகா.**

**விலை: ரூபா 4·75,**

**வெளியீடு: தாய்நாடு பதிப்பகம், 80- 1/4 பிறைஸ் பிளேஸ் கொழும்பு-12.**

**து**யரம் நிறைந்த மானிட வாழ்க்கையை, அதுவும் குடும்ப வாழ்வின் சகல நிலையிலும் பெண்கள் தாங்கிக்கொள்ளும் பொறுப்புக்களையும் அதனுல் ஏற்படும் துயரங்களையும், இழப்புக்களையும் பத்துக் கண்ணீர்க் கதைகளாக செல்வி மண்டூர் அசோகா தமிழ் இலக்கியச் சோலையில் படைத்துள்ள மலரே **கொன்றைப் பூக்கள்.**

மணவாழ்க்கைக்கு ஏங்கித் துடிக்கும் மங்கையர்; விரும்பாத விவாகத்திற்குப் பலியாகியவள்; பழிச்சொல்லுக்குப் பலியாகிய பருவப் பாவை; அக்காவின் வாழ்வு மலர்ச்சிக்காக உழைக்கும் தம்பி; உற்ற தந்தையோடும், காக்கும் சித்தப்பாவோடும் போராடும் புதல்வர்கள், பணத்திற்காகவும், போலி கௌரவத்திற்காக பெற்றேரையும் உறவினரையும் புறக்கணிக்கும் புதல்வர்கள்; வறுமையின் கொடுமையால் வாழவழியற்றிருப்போர்; சாதிக்கொடுமைக்குப் பலியாகிய இளஞ்சந்ததியோர்; என்றவாறுன கதாபாத்திரங்களை நடமாடவிட்டு வாசகர்களை தன் எழுத்தாற்றலால் கவர்ந்துவிடுகிறுர் ஆசிரியை,

**கொன்றைப் பூக்கள்** எம்மை உதிரம் கொதிக்க வைக்கிறது; பரிதாபப்பட வைக்கிறது; கண்ணீர் சிந்தவும் வைத்துவிடுகிறது. அதுவே ஆசிரியைக்குரிய வாழ்த்துக்கள். தமிழ்க் குடும்பங்களின் கண்ணுடியாக கொன்றைப் பூக்கள் சிறுகதைத் தொகுதியை வெளியிட்ட தாய்நாடு பதிப்பகத்து வேலனை வீரசிங்கம் அவர்களைப் பாராட்டும் வேளையில், நூலிற்கு எழிலூட்டும் ஓவியங்களைப் படைத்த வீக்க ஓவியரையும் மறந்துவிடவில்லை.

—நவசோதி

## 'பாரதி நாமம் வாழ்க'



அன்னையெம் தமிழினுக்கு
அளப்பரும் தொண்டுசெய்த
பாவல்லோன் பாரதியவன்
பதமலர்க்கன்பு செய்வாம்

இயம்புதற் கரியதான
இன்சுவைத் தமிழினலே—
தேன்
பாகொக்கும் கவிதை தந்த
பாரதி நாமம் வாழ்க

பெண்ணினப்பெருமை பேசி
பெண் விடுதலைக் கும்மிபாடி
சாதிகளில்லை என்றெமக்கு
சாற்றிய கவி புகழ் வாழ்க

அந்நியர் ஆட்சியின் கீழ்
வெந்துாய ருற்றவர்க்கு—
வீரப்
பாக்களால் எழுச்சி தந்த
பாரதி நாமம் வாழ்க

சுதந்திரப் பள்ளுப் பாடி
சுதந்திரப் பெருமை கூறி
சுதந்திரக் கனல் வளர்த்த
சுதந்திரக் கவி புகழ் வாழ்க

பாரெங்கும் தமிழ் ஒலிக்க
பழம்பெரும் புகழ் நிலைக்க
பணி பல புரிந்த எங்கள்
பாரதி நாமம் வாழ்க

உலகுளோர்க் குயிர்
அளிக்கும்
உழவுக்கும் தொழிலினுக்கும்
—தேன்
பாட்டினுல் மேன்மைசெய்த
பாரதி நாமம் வாழ்க.

பாரதி நினைவு நாளில்
பா புனைந்திடுவதாலே
பாரினில் தமிழராமெம்
பணி முடிந்திடுவதுண்டொ?

பார் மதிக்கும் கலைகளையெம்
பைந்தமிழில் சேர்த்துக் கவி
பாரதியின் கனவினை நாம்
பாரில் நனவாக்கிடுவோம்

தமிழ்ப்பணி புரிந்து என்றும்
தமிழ் மக்கள் "தமிழராக"
தரணியில் வாழும் மட்டும்
பாரதி நாமம் வாழும்

(● செப்டம்பர் 11 பாரதி நினைவு நாள்)

—ச. முருகையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவர் - தமிழ் மறவர்!

**அன்பு நண்பா,**

பால்வடியும் முகம்; ஒளியுமிழும் கண்கள்; கர்மயோகியின தோற்றம்; அடர்ந்து வளர்ந்த ஜடாமுடி; தீட்சண்யமான பார்வை; அச்சமோ கலக்கமோ அற்ற எழுச்சி நோக்கு; நிமிர்ந்த நன்னடை; முகத்தில் அமைதியான தோற்றப் பொலிவு; வயதோ 18 அல்லது 20க்குள் தான் இருக்கும்; ஆம் அந்த வீரர்களை—தங்கத்தம்பிகளை — நீதிமன்றத்திலே கண்டபோது எனது கண்கள் கலங்கின; கண்ணீர்த்துளிகள் என்னையும் மீறி வெளியே வந்துவிழுந்தன; ஒரு பக்கம் மகிழ்ச்சியும் பெருமையும், அலைமோதிட—மறுபக்கம் வேதனையும் வெய்துயிர்ப்புமாக—அந்த இளைஞர்களைக் கண்டபோது இருவகை உணர்வுகளுக்கு ஆட்பட்டேன்!

யாரைப்பற்றி இப்படி எழுதுகிறேன் என்பதை நீ இதுவரையில் ஊகித்திருப்பாய் — துரையப்பா கொலையுடன் சம்பந்தப்படுத்தி குற்றம் சுமத்தப்பட்டு ஜுூரர்களில்லா நீதிமன்றத்தில் சென்ற 7-9-76 செவ்வாய்க்கிழமை காலை நிறுத்தப்பட்ட ஏழு தமிழ் இளைஞர்களை நேரடியாகக்கண்டு அவர்களது புனிதமான கரம் தொட்டு வணங்கிவிட்டு வந்துதான் உணர்வலைகள் மோதிட இம்மடலை உனக்கு எழுதுகிறேன்!

**கொலைகாரர்கள்**

**கொலைக்குச் சதி செய்தோர்—**

என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் பற்றி இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு எழுதுகிறாயே—கொலை போன்ற பயங்கரச் செயல்களுக்கு — வன்முறையிலீடுபடுவோருக்கு ஆதரவு தந்திடலாமா? அவர்களை வீரர்கள், தீரர்கள், தியாகிகள், புனிதமானவர்கள், என்று ஏற்றிப்போற்றிடலாமா? என்று யாரேனும் கேட்பார்களானால் — நான் அவர்களுக்கு சொல்லுவேன்—

இந்த இளைஞர்கள் எழுவர்மீது அரசினால் கொலை, கொலைச் சதி, ஆகிய குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளதே தவிர — அவர்கள் குற்றவாளிகளா அல்லவா என்பது இனிமேல்தான் நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டும்! அப்படித் தீர்மானிக்கப்படும் வரை இந்த இளைஞர்களை கொலைகாரர்கள் என்றோ கொலைக்கு சதிசெய்தோர் என்றோ யாரும் கூறிவிட முடியாது! அரசாங்கத்தின் கண்களில் — அரசாங்கத்தின் கருத்தில் — நீதிமன்றத்தின் முன்னால் இந்த ஏழுபேரும் இப்போது சந்தேக நபர்கள்! அவ்வளவுதான்!!

**கலக்கமற்ற கலாபதி!**
**கிறுங்காத கிருபாகரன்!**
**உருக்கு மனத்தினன் லோகநாதன்!**
**உறுதிதளராத ஸ்ரீதரன்,**
**சாந்த சொரூபி சந்ததியார்**
**இரும்பு மனத்தினன் இன்பம்**
**சிறுமைகண்டு பொங்கும் செல்வக்குமார்**

இந்த எழுவரையும் நீதிமன்றத்தில் கண்டபோது, அவர்கள் உறுதியும், வைராக்கியமும் கொண்ட விடுதலை வீரர்களாக — தமிழ்த் தாயின் தன்னலமற்ற மைந்தர்களாக — தம்மையே தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணிக்கும் தூய தொண்டர்களாகத்தான் என்னுடைய கண்களுக்கு காட்சியளித்தார்கள்; ஆனால் அரசாங்கத்தின் கண்களில் அவர்கள் சந்தேக நபர்களாக காணப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்! அவர்கள் குற்றவாளிகளா அல்லவா என்பதற்கு வழக்கு விசாரணையின் முடிவில் நீதிதேவதைதான் தீர்ப்புக்கூற வேண்டும்!

நண்பா, விடுதலை வீரர்கள்மீது ஏகாதிபத்திய அரசுகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், சமூக விரோதிகள், சதிகாரர்கள் என்று வாயில் வந்தபடியெல்லாம் குற்றம் சுமத்துவதும் — அவர்களுக்கு எதிராக பொய்ச்சாட்சியங்கள் சோடிப்பதும்—சிறைக்குள் தள்ளுவதும் ஒன்றும் புதுமையானதல்ல! இது உலக விடுதலை வரலாறு படித்திடுவோருக்கு தெரிந்த ஒரு பெரிய உண்மையாகும்!

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் எத்தனையோ மாபெரும் விடுதலைச் சிற்பிகளுக்கு எதிராகவெல்லாம் கொலை, கொலைச் சதி, கொள்ளை போன்ற குற்றச்சாட்டுக்களை அந்நிய வெள்ளைக்கார அரசு சுமத்தியிருந்ததை நாம் அறிவோம்! நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட அரவிந்த கோஷ் எனும் புனிதருக்கு—புரட்சித்துறவிக்கு எதிராகக்கூட கொலைச்சதிக்குற்றம் சுமத்தி வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் அந்த உத்தமரை ஏழு ஆண்டு சிறைக்குள் தள்ளிய வரலாறும் நமக்குத் தெரியும்!

இந்தியநாட்டு விடுதலைப்போருக்கு வித்திட்டு அதை ஆரம்பித்துவைத்தவரும், சுதந்திரம் என் பிறப்புரிமை என்று முழங்கியவருமான லோகமான்ய பாலகங்காதர திலகருக்கு எதிராக 1907ம் ஆண்டு வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் தேசத்துரோகக் குற்றம் சுமத்தி, அவரைச் சிறைக்குள் தள்ளவேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்காடி வற்புறுத்திய நேரத்தில், அந்த மகான் நீதிபதிகளுக்கு கொடுத்த வாக்குமூலம் என்ன தெரியுமா?

**“நடுவர் தீர்ப்பு என்னவாயினும், நான் குற்றமற்றவன் என்று வற்புறுத்துகிறேன்; ஆட்டுவிக்கும் உயர்சக்தி ஒன்று உளது. நான் விடுதலையாகி வெளியே வருவதைவிட சிறையில் துன்புறுவதால் எனது இலட்சியம் வலுப்பெறும் என்பது தெய்வ சங்கற்பமாகவிருக்கலாம்!”**

என்று முழங்கினார் திலகர் பெருமான் அன்று! அதே போலத்தான், நமக்கு மேலேயுள்ள சக்தியில்—தர்மத்தில், சத்தியத்தில் பரிபூரண நம்பிக்கை வைத்து—நாம் செல்லுகின்ற பாதை முற்றிலும் சரியானது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, தமிழ் ஈழத் திருநாட்டின் விடுதலையை நோக்கி நம்முடைய புனிதமான யாத்திரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இடையில் சந்திக்கக்கூடிய இன்னல்களை இடுக்கண்களை, துன்பங்களை, துயரங்களை, சிறைக்கொடுமைகளை, சி. ஐ. டியின் சித்திரவதைகளையெல்லாம் தாங்கிய படி—தமிழ் ஈழ

## அரசியல் மேடை

விடுதலைக்கொடியை உயர்த்திப்பிடித்தபடி—தமிழ் இளைஞர்கள்—தமிழர் விடுதலைக் கூட்டணியினர்—சென்றுகொண்டிருக்கிறார்கள்!

குடும்பம் குடும்பமாக — தாயும் தந்தையும், தங்கையும் அண்ணனும், தம்பியும் அக்கையுமாக ஈழவிடுதலைப்போரிலே தமிழ் சமுதாயம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டு வருகிறது! அண்மையில் கூட மட்டுநகரில் ராஜ் மோகன், பரமதேவா ஆகிய இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்; இரண்டு நாட்களுக்கு முன்—ஏற்கெனவே சிறைவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தம்பி மதிமுகராசாவும் மற்றோர் இளைஞரும் மறுபடியும் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்!

**“தண்ணீர் விட்டோ வளர்த்தோம்**
**சர்வேசா இப்பயிரை**
**கண்ணீரால் காத்தோம்”**

என்று பாரதி பாடியது போன்று தமிழ் தியாகிகளின் கண்ணீரில் தன்னலமற்ற தியாகம் என்ற எருவின் துணை கொண்டு — தமிழ் ஈழத்தின் விடுதலைப் பயிர் நாள்தோறும் வளர்ந்து வருகிறது!

நன்பா, இதோ ஒரு பாடல்;

எனக்குத் தெரியும்
இந்தத் தமிழன்
என்றைக்கும் உரிமையை
மீட்கான் என்பது!
மனக் குழப்பத்தினால்
மாளினும் மாள்வான்!
மற்றவர் முயற்சியை
நம்பவும் மாட்டான்!
தன்னினம் பேணான்!
தாய்மொழிபேசான்!
தன்னையே விற்றுத்
தன்குடல் வளர்ப்பான்
என்னினும் ஒரு கை
[illegible] அவன்
[illegible] நீ
வார்த்திடலாம்!

நாலரைக்கோடி தமிழர்களுக்குத் தனியாட்சி கோரியதற்காக சென்னை மத்திய சிறையில் தற்போது அடைக்கப்பட்டிருக்கும் ‘தென்மொழி’ ஏட்டின் ஆசிரியர்—வீரமறவர்பெருஞ்சித்திரனார் — வேதனை மனத்தினராய் வெஞ்சிறையிலிருந்தபடியே பாடியனுப்பிய பைந்தமிழ்க் கவிதையே மேலே தரப்பட்டிருப்பது!

சாதிப் பிரிவினை, மதப்பிரிவினை, ஊர்ப்பிரிவினை, பிரதேசப்பிரிவினை, அரசியல் பிரிவினை, தலைமைப் பதவிக்குக் குத்துவெட்டு, போட்டி பொறாமை, சுய நலப்பித்து, அடிமைத்தனம் போன்ற கேடுகளுக்காட்பட்டு சிதைந்து கிடக்கும் தமிழ் சமுதாயத்தைப் பார்க்கும்போது—பெருஞ்சித்திரனார்க்கு ஏற்பட்டது போன்ற மனச்சோர்வு எனக்கும் சிற்சில சந்தர்ப்பங்களில் உலகத் தமிழனை எண்ணும்போது ஏற்படுகின்ற போதிலும் — இந்தக்கேடுகளிலிருந்தெல்லாம் விடுபட்டு— ஈழத்தமிழன் ஏற்றம்பெற்றுவருகின்றான் — இழந்த திருநாட்டை விரைவில் அமைத்திடுவான்—இளைய தமிழ் வீரன் விழித்து எழுந்துவிட்டான் என்பதிலே பெருமையும் பூரிப்பும் கொள்பவன் நான்!

நம்முடைய கோரிக்கையிலுள்ள நியாயம் எவ்வளவு உயர்ந்தது — சரியானது —சாத்தியமானது — என்பதை அண்மையில் இலங்கையில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ‘இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தத்துவம்’ வலியுறுத்தியிருப்பது மட்டுமல்ல — அந்த மாநாட்டில் கலந்து கொண்ட குட்டி நாடுகள் — குச்சு நாடுகள், தமிழ்ஈழம் பிரிந்தால் வாழுமா — போதிய மக்கள் தொகையுண்டா—விஸ்தீரணம் இடம் கொடுக்குமா?என்கிற கேள்விகளுக்கும் பிரத்தியட்சமாக விடைகூறியிருக்கின்றன. ஆம் நண்பா, உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட குச்சு நாடுகள் சிலவற்றின் விஸ்தீரணத்தையும், மக்கள் — தொகையையும் கொண்ட பட்டியலை இதோ தருகிறேன், படி!

| நாட்டின் பெயர் | பரப்பளவு | மக்கள் தொகை |
|---|---|---|
| பா(B)ஹ்ரெயின் | 430 ச. மைல் | 240,000 |
| கேப் வேடி | 1,557 ,, | 290,000 |
| கொமமொரேஸ் | 838 ,, | 300,000 |
| சைப்பிரஸ் | 3,572 ,, | 660,000 |
| ஜமேக்கா | 4,411 ,, | 2,000,000 |
| குவெயித் | 7,780 ,, | 930,000 |
| லெபனான் | 4,015 ,, | 2,780,000 |
| மொறேஷியஸ் | 787 ,, | 875,000 |
| மோல்டா | 122 ,, | 315,756 |
| குயற்றூர் | 4,000 ,, | 90,000 |
| செசிலீஸ் | 107 ,, | 60,000 |
| சா-ரோம் | 372 ,, | 80,000 |
| சுவாஸிலாண்ட் | 6,705 ,, | 480,000 |
| சிங்கப்பூர் | 266 ,, | 2,236,000 |
| ரினிடாட் அன் ரொபாகோ | 1,979 ,, | 1,060,000 |

நாம் கோரும் தமிழ் ஈழத்தோடு ஒப்பிடும் போது இந்த நாடுகள் அத்தனையும் பரப்பளவில் சிறியவை என்பது கண்கூடு. மொத்த நாடுகளில் இந்த நாடுகளின் சதவீதம் 18 விழுக்காடாகும். இந்த நாடுகள் எல்லாம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கின்றன என்பதையும் மறந்துவிடாதே!

“இலங்கை ஒரு சின்ன நாடு; எனவே பிரிவினைக்கு இடமில்லை என்று சொல்லுகின்ற சிங்கள அரசு இந்தக் குட்டி நாடுகளின் பிரதிநிதிகளுக்கு, சிவப்புக் கம்பளம் விரித்து ராஜ மரியாதையோடு வரவேற்பு நல்கியிருக்கிறது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

எனவே நண்பா, நம்முடைய விடுதலைப் போராட்டம் நியாயமானது என்கிற உறுதியுடன், விடுதலைத்தெய்வத்தை நோக்கி, நம்பிக்கையுடன் முன்னேறுவோம்!

**உன் அன்பு தோழன்.**

**கோவை-மகேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# 7 தமிழ் இளைஞர்களின் சார்பில் 26 சட்டத்தரணிகள் ஆஜர்!

## முதல் எதிரி சார்பில் ஜீ. ஜீ. வாதிடுவார்!

துரையப்பா கொலை வழக்கில் ஏழு தமிழ் இளைஞர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளும் வாக்கு மூலங்களும் நீதிமன்றத்தில் வைத்து அவர்களிடம் கையளிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏழு தமிழ் இளைஞர்களின் சார்பிலும் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி, எம். திருச்செல்வம் கியூ. சி. உட்பட 26 சட்டத்தரணிகள் இலவசமாக ஆஜராகின்றனர்.

பாலசுப்பிரமணியம் கலாபதி, விஜேசித்தம்பி ஆறுமுகம் கிருபாகரன், சபாநாயகம் லோகநாதன், வைத்திலிங்கம் ஸ்ரீதரன், தம்பிப்பிள்ளை சந்ததியார், இன்பம் அல்லது கனகரத்தினம் விஸ்வசோதிரத்தினம், செல்வரத்தினம் செல்வக்குமார் ஆகிய ஏழு தமிழ் இளைஞர்கள் மீது யாழ்மேயா துரையப்பாவை கொலை செய்தது. கொலைக்கு சதி செய்தது என்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அரசு தொடர்ந்துள்ள வழக்கு மூன்று மேல நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஜூரர்களற்ற நீதிமன்றத்தில (ட்ரயல்—அற—பார்) கடந்த 7-9-76ல் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றம் சுமத்தப்பட்டுள்ள இளைஞர்களிடம் அவர்களுக்கெதிரான குற்றப்பத்திரிகையும் வாக்கு மூலங்களும் கையளிக்கப்பட்டன. அவற்றை குற்றம் சாட்டப்பட்டுள்ள இளைஞர்கள் முகத்தில் எதுவித சலனமோ சஞ்சலமோவின்றி சிரித்த முகத்துடன் பெற்றுக்கொண்டனர்.

கொழும்பு மேலதிக நீதிபதி திரு. மோரிஸ்பெரேரா, அவிசாவளை மேல் நீதிமன்ற நீதிபதி திரு. பரிநதா ரணசிங்கா, அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி. எஸ். டி. மூனமலை ஆகிய நீதிபதிகளைக்கொண்ட 'ட்ரயல் அற் பார்' நீதிமன்றம் அவசரகால விதிகளின் கீழ் இதற்கென அமைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை நவம்பர் முதலாம் திகதி ஆரம்பமாகும்.

### 26 சட்டத்தரணிகள்

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஏழு தமிழ் இளைஞர்களின் சார்பிலும் சட்டத்தரணிகள் ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். பாலேந்திரா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராகும் 26 சட்டத்தரணிகள் வருமாறு:

திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி., எம். திருச்செல்வம் கியூ. சி. முன்னாள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், ஏ. மகேந்திரராசா, ஜே. ஏ. பி. செருபிம், எம். சிவசிதம்பரம், ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், எஸ். நடராசா, எஸ். சி. சந்திரகாசன், கலாநிதி என். திருச்செல்வம், கனக- ஈஸ்வரன், திருமதி சாந்தினி ... நேரு, குமார் பொன்னம்பலம் எஸ். உருத்திரமூர்த்தி, எஸ். சுமந்திரன், கே. துரைரத்தினம், கே. தேவராஜா, பி. காராளசிங்கம், என். விஜயநாதன், எம். பரராசசிங்கம் எஸ். மகேந்திரன், வி. யோகேஸ்வரன், கே. மனோகரன், எம். செல்லத்தம்பு.

இவர்கள் அனைவரும் இலவசமாகவே இவ்வழக்கில் ஆஜராவது குறிப்பிடத்தக்கது. இவர்களில் 14 சட்டத்தரணிகள் கடந்த 7-9-76 பிற்பகல் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்று குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இளைஞர்களை வழக்குத் தொடர்பாக சந்தித்துப் பேசினர்.

இவ்வழக்கில் அரசு தரப்பில் 120 சாட்சிகள் சாட்சியமளிக்கவிருக்கின்றனர். 36 தடயப் பொருட்களும் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

## யாழ் வளாகப்— பூரண விசாரணை தேவை!

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர்கள் நடத்தியுள்ளதாகச் சொல்லப்படும் இன வெறியாட்டங்களும்—அதன் பயனாக வளாகம் மூடப்பட வேண்டிய அளவுக்கு அங்கு நிலைமை முற்றியதும் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கவில்லை!

இந்நாட்டில் சிங்கள இனத்துக்கு இன்று ஏற்பட்டிருக்கும் ஆதிக்கவெறி — அத்தகைய வெறிக்கு ஆலவட்டம் வீசி அன்றாடம் அதை வளர்த்துவரும் சிங்கள ஏகாதிபத்திய அரசின் கொடிய பாஸிஸ நடவடிக்கைகள்—ஆகிய அரசியல் நோய்களின் வெளிப்பாட்டையே யாழ்வளாகத்திலும் நாம் இப்போது காண்கிறோம்!

தமிழ் ஈழத்திலேயே—அதுவும் நூற்றுக்கு நூறுவீதம் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணத்திலேயே — தமிழ் இனம் இன்று ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு இனமாக — அடிமைச்சாதியாக—நடத்தப்பட்டு வருகிறது!

நான் ஆளும் இனத்தவன்— தமிழன் ஆளப்படும் அடிமை இனத்தவன் — எனவே நான வைத்தது தான் சட்டம் — என்கிற ஆதிக்க ஆணவ வெறி சிங்கள இனத்தை இன்று ஆட்டிப்படைக்கிறது.

1974தை 10ம் திகதி உலகத் தமிழ் மாநாட்டில் கூடிய பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளான தமிழ் மக்கள் இந்த வெறியினால் கொடூரமாகத்தாக்கப்பட்டு — ஒன்பதுபேர் உயிர் குடிக்கப்பட்ட நிகழ்ச்சியும்—

பருத்தித்துறையில் நடைபெற்ற களியாட்ட விழாவின்போதும — அண்மையில் அமைச்சர்கள் சிலர் பருத்தித்துறைக்கு சென்றதையொட்டி அங்கு இடம்பெற்ற கலைவிழாவின்போதும்—அப்பாவித் தமிழ் மக்கள் காரணமின்றி வெறித்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவமும்—

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழா விடுதலைக் கூட்டணியின் மாநாட்டின்போது—தமிழ் இளைஞர்கள் கொடூரமாகத் தாக்கபபட்டதும்—

புத்தளத்தில் மசூதியிலும், மற்றும் இடங்களிலும் இடம் பெற்ற காட்டுமிராண்டித்தனங்களும — மிலேச்சத்தனமான கொடுமைகளும்—

யாழ்ப்பாணத்தில் திருவிழாப் பார்த்துவிட்டு திரும்பிச்சென்ற அப்பாவித் தமிழ் இளைஞரை ஓடவிட்டு முதுகில் சுட்டுப் படுகொலை புரிந்ததும்—

யாழ் பொலிஸ் அதிபரிடம் புகார் செய்யச் சென்ற தமிழ்த் தலைவர்கள் இனவெறிபிடித்த பொலிசாரால தாக்கப்பட்டு, அவர்களது காரும், கூட்டணித்தொண்டர்களும் எதுவிதகாரணமுமின்றி அடித்து நொருக்கப்பட்டதும்—

ஆதிக்கவெறியின் விசுவரூப வெளிப்பாடுகள் என்றே தமிழ் மக்கள் கருதுகிறார்கள்!

இந்தப்பட்டியலில் இப்போது யாழ் வளாகச் சம்பவமும் சேர்ந்து இருக்கிறது!

அம்பாறை தொழில் நுட்பக்கல்லூரியில் கால்பந்து போல தமிழ் மாணவர்கள் அடித்து நொருக்கப்பட்டார்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு!

அதே வியாதி—அதே ஆதிக்கவெறி யாழ் வளாகத்திலும் இப்போது தலையெடுத்திருக்கிறது.

தமிழ் மாணவர்கள் எவ்வளவோ பவ்வியமாகவும், பண்புடனும் நியாயத்துடனும் தங்கள் நிலையை எடுத்துவிளக்கியிருந்தும் கூட, சிங்கள மாணவர்களின் ஆதிக்க இன வெறி அவற்றை அங்கீகரிக்க மறுத்திருக்கிறது!

**படிப்பதற்காக யாழ் வளாகத்துக்கு சென்ற சிங்களமாணவர்கள் தமிழர் நாட்டையும், வீட்டையும் பிடித்தே தீருவோம் என்று கச்சை கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்!**

யாழ் வளாகம் சிங்கள ஏகாதிபத்திய வெறித்தனத்தின் நுழைவாயிலாக — தனித்தமிழ நாடாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை நுழைக்கும் ஒரு கருவியாக பயன்படவிருக்கிறது— அதற்காகவே வளாகம் அங்கு திறக்கப்படுகிறது என்று அன்று நாம் கூறினோம்—இன்று அது உண்மையாகிவிட்டது!

வளாகம் வந்துவிட்டதாக ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு — சிந்திக்கமறுத்து அம்மாவின் திருப்புகழ் பாடியவர்கள் இனி என்ன கூறுவார்களோ?

**தமது அறிக்கையில் சுமத்தப்பட்டிருக்கும் அத்தனை குற்றச்சாட்டுக்களையும் நிரூபிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக யாழ்வளாகத தமிழ் மன்றத்தினர் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர்.**

எனவே இது விடயமாக பல்கலைக்கழக 'செனட் அகம்' ஒரு பரிபூரண விசாரணையை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்!

**யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர் மத்தியில் தோன்றியிருக்கும் நியாயமற்ற ஆதிக்க இனவெறிப் போக்கினை முளையிலேயே கிள்ளி எறிய 'செனட் அகம்' கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்!**

இன்றேல் விரும்பத் தகாத, கசப்பான எதிரொலிகள் ஏனைய வளாகங்களிலும் கேட்கத்தொடங்கலாம்!

சிங்களவர்களிடையே ஏற்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பு வெறியிலிருந்து தமிழ்தேசிய இனம் மீட்சிபெற — இந்நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டிட— தமிழ்தேசிய இனம் தன்னைத்தானே ஆளும் சுதந்திர இனயாகத் தன்னை ஆக்கிக்கொள்வதே ஒரேயொரு வழியென்பதை உணர்ந்து தமிழ் மாணவ சமுதாயம் அந்த இறுதி இலட்சியத்தின் வெற்றிக்காக உழைக்குமாக!

## ஆடல் காணீரோ!



தமிழர்விடுதலைக் கூட்டணியின் பிரமுகர்களில் ஒருவரும், இ. தொ. கழக பொதுச் செயலாளரும், மட்டுவில் சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்டவருமான சட்டத்தரணி திரு. மு. பரராசசிங்கம் அவர்களின புதல்வி. செல்வி. துஷியந்தியின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 17-9-76 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு கண்டி புனித அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் மூதறிஞர் தந்தை செல்வா, திருமதி செல்வா ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது. மத்திய மாகாண சைவ மகாசபையின் நாட்டியக் கல்லூரியில் செல்வி. செல்விலட்சுமி இரத்தினசபாபதியிடம் செல்வி துஷியந்தி பரதநாட்டியம் பயின்றார். 11 வயதுச் சிறுமியான செல்வி துஷியந்தி கண்டி பெண்கள் உயர்பள்ளியில் 7வது வகுப்பு படிக்கிறார்.


வாங்கிவிட்டீர்களா?

சுடர்

ஆவணி இதழ்

- 'என் கணவர்' - திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் விறுவிறுப்பான கட்டுரை.
- கவிஞர் காசி ஆனந்தனின் தித்திக்கும் கவிதைகள்
- பிரபல நாவலாசிரியர் கே. எஸ். ஆனந்தனின் தொடரோவியம்!
- கோவை மகேசனின் தத்துவச் சிந்தனைகள்!
- மூன்று முத்துச் சிறுகதைகள்.
- கலைஞர் கருணாநிதியின் பதில்கள், கேள்வி பதில், மருத்துவக் குறிப்புக்கள், விஞ்ஞானக் கட்டுரைகள்—இன்னும் பல நகைச்சுவை அம்சங்களுடன்.

தமிழர் தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் வண்ண முகப்போவியத்துடன்

எங்கும் விற்பனையாகிறது! விலை ரூபா ஒன்று மட்டுமே!

- சுடர் ஒன்றே சிறந்த கலை இலக்கியத் திங்களிதழ்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர் சலாட்டா!

—1-ம் பக்கத் தொடர்

**வீடுவாசல்களை பறிப்பதற்கே என்பது ஐயத்துக்கிடமின்றி உண்மையாகிவிட்டது!**

இதோ யாழ் வளாகத்தில் சிங்கள மாணவர்கள் நடந்துகொண்ட இனவெறிப் போக்கினை எடுத்துக்கூறுகிறது யாழ் வளாகத தமிழ் மன்றம்: —

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகமானது 6-9-76 அன்று மூடப்பட்டதிற்கான காரணங்களின் பின்னணியிலுள்ள சில தகவல்களை வளாகத் தமிழ் மாணவர்களின் சார்பில் இம்மன்றமானது தமிழ் மக்களுக்கு அறியத்தர விரும்புகின்றது.

வளாக மாணவர் சங்கத்திற்கு 11 கோரிக்கைகள் மாணவர்களால் விடுவிக்கப்பட்டன. அவைகளாவன:—

1. தளபாட விடுதிவசதி
2. வளாகவிடுதி உணவு விநியோகம்
3. விரிவுரை அறைவசதிகள்
4. நிரந்தர வளாக வைத்தியர்
5. வர்த்தக மாணவர்க்குத் தனிப்பீடம்
6. சிறப்புப்பட்ட நெறிக்கான விரிவுரையாளர்கள்
7. நூல் நிலையத்தில் நூல்கள் பற்றுக்குறை
8. வங்கி, தபால்கந்தோர் வசதிகள்
9. நிரந்தர மொழி பெயர்ப்பாளர்
10. பதிவுப்பணப் பிரச்சினைகள்
11. அடுத்த வரு— புதிய மாணவர்கள

இக் கோரிக்கைகளுக்காக ஒரு தொடர்ச்சியான வகுப்புப் பகிஷ்கரிப்பொன்று நடாத்தப்பட வேண்டுமென்று முன் மொழியப்பட்டது. இக்கோரிக்கைகள் முதன் முதலில் யாழ் வளாக மாணவர் சங்கப் பொதுக் கூட்டத்தில் விவாதத்திற்கென எடுத்துக்கொள்ளப்பட்டன.

**இக் கோரிக்கைகளில் முதலாவதாக யாழ் வளாக மாணவர்கள் தந்போது தங்கியிருக்கும் தனியார் வீடுகளை நஷ்டஈடின்றி சுவீகரிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. இது சிங்கள மாணவர்களால முழுமையாக, தீவிரமாக வலியுறுத்தப்பட்ட போது தமிழ மாணவர்கள அதை வன்மையாகக் கண்டித்தனர். அதற்குக் காரணமாக அக் கோரிக்கையின் பின்னணியில் நிறைந்த வகுப்புவாதம இருப்பதாகத் தமிழ் மாணவர்கள் கருதினார்கள். இக்கருத்தை சிங்கள மாணவர்கள் அங்கு ஆற்றிய உரைகள் வலியுறுத்துகின்றன.**

மேலும் இக்கோரிக்கையின் மீது, பெரும்பாலான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்மக்கள் முதலாளிவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அங்கு தெரிவிக்கப்பட்ட தவறான கருத்தை எதிர்த்து, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள் பெரும்பளவில் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் தமது குடும்ப வருமானம் போதியதற்றதான நிலையிலும், வளாக நிர்வாக பீடம்கேட்டுக்கொண்டதின் பேரிலுமே வளாக மாணவர்களுக்கு விடுதி வசதிகள் அளித்து வருகின்றனர் என்ற கருத்து தமிழ் மாணவர்களால் வலியுறுத்தப்பட்டது.

மேலும் தமிழ் மாணவர்கள தங்கள் கருத்துக்களை தெரிவிக்கையில் மாணவர்களது தங்குமிடப்பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட 25 ஏக்கர் காணிகளில் புதிய விடுதி மண்டபங்களை ஏற்படுத்துதலே சிறந்த ஏற்கத்தகு தீர்வென தமிழ் மாணவர்கள் வினயமாகக்கேட்டுக் கொண்டனர். மேலும் வளாகம் திறக்கப்பட்டு இரண்டு வருடங்களாயும் இதுவரையிலும் எந்த முயற்சிகளும் விடுதி மண்டபங்கள் கட்டுவதற்காக எடுக்கப்படவில்லையென்பதைச் சுட்டிக்காட்டி அதையும் வன்மையாகக கண்டித்தனர். இதன் எதிரொலியாகவே கருத்து வேறுபாடுகள் இனரீதியான சிந்தனையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டன. மற்றும் விரிவுரை மண்டபங்கள் போதாமையாயுள்ளன என்ற கோரிக்கையும் எழுந்தது. அதற்கும் அரசு முயற்சிகள் எடுக்காததே காரணமென தமிழ் மாணவர்களால் தெரிவக்கப்பட்டது.

ஏனைய நியாயமான கோரிக்கைகளுக்கு தமிழ் மாணவர்களின முழு ஆதரவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இவற்றில் பல இவ்வளாக நிாவாக பீடத்தினல் மட்டுமே தீர்க்க முடியாதவை என்பதோடு செனட் அகமே இதை தீர்க்க வல்லது என்ற கருத்தும் தமிழ் மாணவர்களால் முன் வைக்கப்பட்டது. எனவே அதற்குரிய அவகாசம் வளாகத் தலைமைப் பீடத்திற்கு கொடுக்கப்பட்ட பின்னர் அவைகள் தீர்க்கப்படாத பட்சத்தில் மாத்திரமே தொடர்ச்சியான பகிஷ்கரிப்பில ஈடுபட வேண்டுமெனறு பெரும்பாலான தமிழ் மாணவர்கள் கருத்துத்தெரிவித்தனர். இது அங்கு ஏற்றுக்கொள்ளபபட்டதோடு அன்றைய கூட்டம் முடிவடைந்தது.

மேலும் இதன் பிறகு இக்கோரிககைகள் தொடர்பாக மாணவர் சங்க செயற்குழு வளாகத் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. அங்கு கோரிக்கைகள் பலவற்றிறகு சாதகமான பதில்கள் வழங்கப்பட்டதோடு ஏனைய கோரிக்கைகள் தொடர்பாக விரைவில் துணைவேந்தருடன மாணவர் சங்கம் பேச்சுவார்த்தைகளை நடாத்த ஒழுங்குகள் செய்து தருவதற்கு வளாகத் தலைவர் உறுதியளித்தார்.

இதன் பின்னர் நடந்த வளாக மாணவர் சங்கப் பொதுக்கூட்டத்தில் தொடர்சசியான பகிஷ்கரிப்பு ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

**இதன்பின்னர் வளாக மனிதப் பண்பியற்பீட மாணவர் சங்கம் ஒரு அவசர பொதுக் கூட்டத்தைக் கூட்டியது. அக்கூட்டத்தில் சிங்கள மாணவர்கள் பகிஷ்கரிப்பு உடனே நடாத்தப்பட வேண்டுமென்று வலியுறுத்தினர். இதற்கெதிராக தமிழ் மாணவர்கள் சிலர் கருத்துத் தெரிவிக்க முயன்றபோது சிங்கள மாணவர்கள் கூக்குரலிட்டு அவர்களை பேசவிடாது தடுத்தனர். இதையடுத்து கூட்டத்தில் கருத்து தெரிவிக்க சுதந்திரமற்ற நிலையிலிருந்த தமிழ மாணவர்கள் தாங்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பொன்று நடாத்தப்படும் பட்சத்தில் அதில் கலந்துகொள்ள முடியாதெனக் கூறி கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.**

இதன் பின்னரே கூட்டத்தில் வகுப்புகளை பகிஷ்கரிப்பதென தீர்மானம் எடுக்கப்பட்டது.

பின்வருவன அனைத்தும் 4-9-76 (சனி, ஞாயிறு) நாட்களில் எமது மன்றத்தினரால் நடாத்தப்பெற்ற கலைவிழாவின்போது வளாகத்தினுள் நடைபெற்ற சில சம்பவங்களை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய நிலையிலுள்ளோம்.

(1) 4-9-76இல் தமிழிலக்கிய மன்றத்தினருக்கு ஒதுக்கப்பட்டிருந்த விளம்பரப் பலகை அடித்து நொறுக்கப்பட்டிருந்தது.

(2) தமிழ் மன்ற விளம்பரப் பலகையிலுள்ள அறிவித்தல்கள் சகலவையும் நீக்கப்பட்டிருந்தன.

(3) போசனசாலையினுள்ளிருந்த சில உபகரணங்கள் உடைக்கப்பட்டன. அத்துடன் போசனசாலையிலுள்ள தமிழ் ஊழியர் ஒருவர் கழுத்தில் நெரிககப்பட்டார்.

(4) வளாகத் தமிழ் ஊழியர் ஒருவரின் சைக்கிளது அவரின் அனுமதியின்றி வெளியில் எடுத்துச்செல்லப்பட்டிருந்தது.

(5) தமிழர்க்கெதிரான சுலோகங்கள் வளாகச் சுவர்களில் (குறிப்பாக கலைவிழா மண்டபத்தினுள்) காணப்பட்டன..

(6) வளாகத் தமிழ் விரிவுரையாளர்கள் சிலர் கேலி செய்யப்பட்டனர்.

(7) கலைவிழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சியின் போதுமின் இணைப்பை துண்டிக்க முயற்சி எடுக்கப்பட்டபோது அது வளாகப் பாதுகாவலர்களால் முறியடிக்கப்பட்டது.


மேலுள்ள சம்பவங்கள் நடைபெற்றுள்ளனவென்று நிரூபிக்க இம்மன்றம் தயாராகவுள்ளது.

மேலும் இச் சம்பவங்கள் ஒன்றின் மீதும் நடவடிக்கை எடுக்க வளாக நிர்வாகபீடம் இதுவரை முன்வரவில்லை. என்பதையிட்டு இம்மன்றம் வருத்தம் தெரிவக்கின்றது.

இப்பரபரப்பான சூழ்நிலைகளின் பின்னரே வளாகம் மூடப்பட்டது.

வளாகம் மூடப்பட்டதன் மூலம் சகலமாணவர்களினதும் — குறிப்பாக தமிழ் மாணவர்களினது கல்வி பாதிக்கப்பட்டிருப்பதையிட்டு தமிழ் மாணவர்களின் சார்பில் இம் மன்றம் கண்டனம் தெரிவிக்கப் வேண்டிய நிலையில் இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

அத்துடன் வளாகமானது உடனடியாக திறக்கப்பட வேண்டுமென்று தமிழ்மாணவர்களின் சார்பில் இம்மன்றம் வளாக நிர்வாக பீடத்தைக்கேட்டுக்கொள்கிறது.




## நீதிமன்றத்தில் ஒரு மறக்கொணுக் காட்சி!

துரையப்பா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகளில் ஒரு பகுதியினரை மேலேயுள்ளபடத்திலும், குற்றம் சாட்டப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் சிரித்த முகத்துடன் நீதிமன்றத்தில் பொலிஸ் காவலுக்கு மத்தியில் வீற்றிருப்பதை கீழேயுள்ளபடத்திலும் காணலாம். படத்தில் காணப்படுபவர்கள் கலாபதி, இன்பப், செல்வக்குமார், கிருபாகரன், சந்ததியார் (கண்ணாடி அணிந்திருப்பவர்) ஆகியோர்.

## கலைவிழா

இலங்கைப் பல்கலைக்கழக வித்தியோதய வளாகத் தமிழ் மன்றத்தின் கலைவிழா 12-9-76 ஞாயிற்றுக் கிழமை காலை முதல் மாலைவரை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறுகிறது.


## "நவராத்திரி மலர்"

**மில்க்வைற் செய்தி. 9.**

மேற்படி இதழைப் பெறவிரும்புவோர் மில்க்வைற தயாரிப்புகளின் எந்தவொரு மேலுறைகளில் 2ஐ அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்,

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
**த. பெ எண் 77 யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுவெட்டி பண்படுத்தி மலையகத்தில் தேயிலை பயிரிட்டவர்கள் சிங்களவர்களாம்!

## கண்டியை கடைசியாக ஆண்டவன் சிங்களவனும்!

கொழும்பில் நடந்த கூட்டுச்சேரா நாடுகளின் ஐந்தாவது உச்சி மகாநாட்டையொட்டி இலங்கை 'ரைம்ஸ்' பத்திரிகை நிறுவனத்தினர் ஒரு மலர் வெளியிட்டார்கள். இதன் அட்டை இலங்கை வனப்பு ஒன்றை சித்திரிப்பதுபோலும் மிக அழகாக இருக்கிறது. ஆனல் உள்ளே எழுதப்பட்டுள்ள கட்டுரைகளையும், விளக்கங்களையும் படிக்கும்போது, கவலையாகவும், ஏமாற்றமாகவும் இருக்கின்றது.

இலங்கையின் வரலாற்றைப்பற்றி, மக்களைப்பற்றி, பொருளாதாரம் பற்றி, இயற்கை வளம், வனப்பு, பற்றி, அரசியல், மதம், சமூகம் பற்றி பிறநாட்டுத் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் விளக்குமுகமாக, வெளியிடப்பட்ட இந்த மலரிலே தமிழினத்திற்கு—இடமில்லை இந்தநாட்டின் வளர்ச்சியில், வரலாற்றில், ஆட்சியில் தமிழன் இடம் பெறவில்லை. என்பதை வெளிநாட்டவருக்கு எடுத்துக்காட்டும் வகையில் மிகக் கவனமாக உருவாக்கப்பட்டுள்ளது இந்த மலர்.

இலங்கையின் வரலாறு, தேயிலை, இரத்தினக்கல், புத்தமதம், விவசாயம், கொழும்பு நகர், சிங்களக்கலை,புதிய அரசியல் சட்டம், வனவிலங்குகள், இயற்கை வனப்பு, தொலைக் காட்சி, மீன்வளம் ஆகிய கட்டுரைகளும், இன்னும் சில அம்சங்களும் 'எதிரிகள் இல்லாத நாடு' என்றஆதர்கிளாக்கின் கட்டுரையும், பல படங்களும் இந்த மலரில் இடம் பெற்றுள்ளன.

வெளிநாட்டுத் தலைவர்களும், பிரதிநிதிகளும், பார்வையாளரும், ஏராளமாக வருகைதந்த இலங்கையில் இத்தகையதொரு தனிச் சிங்கள வரலாற்று ரீதியான மலரை வெளியிட்டுப் பிரச்சாரப்படுத்திய ரைம்ஸ் நிறுவனத்தினர். இந்நாட்டின் பெரும்பான்மை மக்களின் பாராட்டை நிச்சயம் பெறுவர். ஆனல், இந்நாட்டின் ஆதிக்குடிகளாகவும், ஆண்ட மக்களாகவும், நாட்டின் வளத்திற்கும் வாழ்விற்கும் காரணமாயுள்ள தமிழ் மக்களைப் புறக்கணித்து, இருட்டடிப்பு செய்தமை, இந்த நாட்டுத் தமிழன் என்றுமே மறக்கமுடியாத சோகக் கதை.

**நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழனுக்கு பங்கில்லை என்பதைக் காட்ட, தேயிலைத்தோட்டங்களை விருத்தி செய்தவர்கள் சிங்களவரே என்று தேயிலை பற்றிய கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.**

"தொடக்கத்தில் காடு வெட்டி, நாடாக்கி, கோப்பி தேயிலையும் பயிரிட்டவர்கள் சிங்களத்தொழிலாளர்தான் சிங்களவர்கள் சோம்பேறிகள் என்பது கட்டுக்கதை. பசிபட்டினியால், வரட்சியால் பாதிக்கப்பட்ட தென்னிந்தியத் தமிழர்களுக்கு புகலிடம் கொடுத்தது இலங்கை" என்றும் இக்கட்டுரை கூறுகின்றது.

முதல் நகரம் —கொழும்பு பற்றிய கட்டுரையிலே தமிழர் கொழும்பில் வந்து குடியேறியவர்கள். வியாபாரத்திற்காக, கல்விக்காக, உத்தியோகத்திற்காக, வந்தவர்கள். இவர்கள் சிக்கனமானவர்கள். முயற்சியுடையவர்கள், கடும் உழைப்பாளிகள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

கூட்டுச்சேரா நாடுகள் பற்றிய சுருக்கவரலாற்றுத் தொடரில், இலங்கை பற்றிய, குறிப்புக்களில், இலங்கைத் தமிழர் 11% என்றும் இந்தியத் தமிழர் 10.6% என்றும், 1505ம் ஆண்டு வரையிலான நீண்டகாலம், நாட்டை சிங்கள மன்னர்கள் ஆண்டார்கள் என்றும் காணப்படுகின்றன.

கண்டி—எனும் நிழற்படத்திற்கருகேயுள்ள குறிப்பில் சிங்கள மன்னனின் கடைசித் தலைநகர் என்று காணப்படுகிறன.

தென்னைத் தோட்டத்தை படமெடுத்துப்போட்டவர்கள், பனையின் பயனை மறந்துவிட்டார்கள்.

'ஆதர் கிளாக்கின் கட்டுரையில் மாத்திரம்,' "சிங்களம் இங்கே அரச கருமமொழி — இரண்டாவது பெரும்பான்மையான தமிழ் இனத்திற்கு ஓரளவு தீமை பயக்கும் வகையில்..." என்று எழுதப்பட்டுள்ளது.

சுவைச்சரக்குகளும் கறியும் எனும் கட்டுரையின் அடியில், எங்கள் மாம்பழத்தின் சுவையை, மறக்க முடியாமலே, என்னவோ, மாம்பழம் இலங்கை எங்கும் கிடைக்கிறது. ஆனல் யாழ்ப்பாண மாம்பழம்தான் மிகச் சுவையானது என்று, காணப்படுகின்றது. Curry எனும் ஆங்கிலச்சொல் 'கறி' எனும் தமிழ் சொல்லே என்றும் கூறப்பட்டுள்ளது.

இவை தவிர—

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு காலாக இருந்தவர்கள், மலைநாட்டுத் தமிழர்கள் என்று இதுவரை யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை, பொய்யாகிவிட்டது.


கண்டிநகரில் இருந்த கடைசி மன்னன், இந்தியத் தமிழன் கண்ணுச்சாமி—சிறீவிக்கிரமராசசிங்கன்—என்ற வரலாற்றுண்மை மறுக்கப்பட்டுவிட்டது;

நாட்டின் விடுதலைக்கும், வளர்ச்சிக்கும் உழைத்த சேர். பி. இராமநாதன் போன்றோரை மறந்துவிட்டார்கள். வடக்கு கிழக்குக்கே சொந்தமானவர்கள்; தமிழர்கள் என்று இன்று சொல்லுகிறவர்கள். தமிழர் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்று நாளை எழுதுவார்கள். இந்த மலரைப் படிக்கும் வெளிநாட்டான் எங்களைப் பற்றியும், விசேடமாக ஏதாவது கணிப்பானு? இதுதான் கேள்வி?

—தென்மட்டுவில் வளவன்

### வரலாற்றைத் திரிக்கிறது 'கூட்டுச்சேரா மாநாட்டுமலர்!'

## செயல்வீரன் சேயன்



கடந்த ஓராண்டாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் மட்டக்களப்பு கல்லடி உப்போடையைச் சேர்ந்த இளைஞர் செயராசா இவர்தான்! இந்த இளைஞர் 1957ம் ஆண்டு ஆசிரியர் தியாகரசாவின் மகனுகப் பிறந்தார். பாடசாலையிற் கல்விகற்கும் காலங்களிலேயே தமிழ் இன, மொழி உணர்ச்சி இவருடனே வளர்ந்துவந்தது. அதனுலே தமிழ் அபிமானிகளால் செல்வன் 'சேயன்' பாராட்டப்பட்டுவந்தார்.

இவர்மேல் பொருமை கொண்ட ஒருசில அடிவருடிகள் அரசாங்கத்திற்கு மாறுனவரென்று இவரைக் காட்டிக் கொடுத்தார்கள் இதன் காரணமாக பொலிசாரால் பல தடவை தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். கடைசியாக மட்டக்களப்பில் நடந்த அசம்பாவிதங்களில் சம்பந்தப் படுத்தி 19-8-76ல் இவரைக் கைது செய்து வெலிக்கடைச்சிறையில் இற்றைவரையும் வைத்திருக்கின்றுர்கள். இவர் சிறைவைக்கப்பட்ட காலத்தில் கனிஷ்ட தராதரப் பரீட்சை நடந்தது. அதற்குத்தோற்றமுடியாத நிலையில் சிறையிலேயே இருந்தார்.

● "இலங்கைத் தமிழர் நிலையறிந்து

# நாலரைக் கோடி தமிழர்களின் உள்ளம் குமுறிக் கொண்டிருக்கிறது"

## வி. என். நவரத்தினம் கூறுகிருர்!

இலங்கையில் தமிழ் மக்கள் நடத்திவரும் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்குவதற்கு இலங்கை அரசு கையாண்டு வரும் அடக்குமுறை பற்றி தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களும் தமிழகத்தின் நாலரைக்கோடி தமிழ் மக்களும் தெளிவாக அறிந்து வைத்திருக்கிருர்கள். ஆயினும் இந்தியாவில் அமுலிலிருக்கும் அவசரகாலச் சட்டத்தினுலும் பத்திரிகைத் தணிக்கையினுலும், அவர்கள் இதுசம்பந்தமான தங்கள் உள்ளக்குமுறல்களை வெளிக்காட்ட முடியாத நிலையிலுள்ளனர்!"

—இவ்வாறு அண்மையில் இந்தியாவுக்கு சென்று திரும்பிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் சுதந்திரனுக்குத் தெரிவித்தார். இந்தியாவில் ஏறத்தாழ 45 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த திரு. நவரத்தினம் டெல்லியில் உள்ள அனைத்திந்திய தலைவர்களையும், தமிழக அரசியற் தலைவர்களையும் சந்தித்து ஈழத்தமிழர் பிரச்சினை குறித்தும், தமிழ்ஈழப் போராட்டம் பற்றியும் எடுத்துவிளக்கினுர். அப்போது அவர்கள் எமது பிரச்சினையை சரிவரப் புரிந்துகொண்டு மனத்துள் குமுறியபடி இருப்பதை தாம் கவனித்ததாக திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் முன்னுள் முதல்வரும் தி. மு. க. தலைவருமான கலைஞர் மு. கருணநிதி, தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனுர், தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சி., டெல்லிப் பாராளுமன்ற சபாநாயகர் திரு. தில்லான், ஆகியோருட்பட தமிழக, இந்திய தலைவர்கள் பலரையும் திரு. நவரத்தினம் சந்தித்துப்பேச்சு வார்த்தை நாடத்தினுர். இந்திய பத்திரிகையாளர்களையும் திரு. நவரத்தினம் சந்தித்தார்.

தமிழக அரசியல் நிலைமை குறித்து திரு. நவரத்தினத்திடம் கேட்டபோது — தி. மு. க.வின் முன்னணி வீரர்கள் பலர் இப்போது சிறைக் கோட்டங்களில் இருப்பதாகவும், தமிழ் சமுதாயத்தின் அடிமட்டத்தில் வேரூன்றியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எந்த வகையிலும் செல்வாக்கு குறையவில்லையென்றும் பொதுத்தேர்தல் நடைபெற்றுல் தி. மு. க.வே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

இழப்புக்கள்:

### சதாசிவம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பருத்தித்துறைத் தொகுதி பிரமுகரும் மிக நீண்டகாலமாக இனவிடுதலை இயக்கத்தில்தோளோடு தோள் நின்று உழைத்தவருமான திரு. எஸ். எஸ். சதாசிவம் கடந்த 1-9-76ல் காலமானுர். அவரது இறுதி ஊர்வலத்திலும் மரணச் சடங்குகளிலும் பருத்தித்துறை தொகுதியின் தமிழ் இளைஞர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடியும் பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினமும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டனர்.

### அருளப்பு

கோட்டைக் கல்லாறு தமிழ் இளைஞர் பேரவையின் ஆலோசகரும், த. வி. கூட்டணியின் தலைவருமான திரு. அருளப்பு (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)28-8-76ல் காலமானுர். இவரின் பூதவுடல் உதயசூரியன் கொடியினுல் மூடப்பட்டு கோட்டைக்கல்லாற்று மயானக் கரைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. இவரின் பிரிவு கோட்டைக் கல்லாற்றுத் தமிழ் மக்களுக்குப் பெரும் இழப்பாகும்; நமது அனுதாபங்கள் உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் அரியநாயகம்!



அஞ்சா நெஞ்சன்,
ஆண்மைச் சிங்கம்!
ஏறுபோல நடை,
எஃகு உள்ளம்!
அடிமைத்தளையை
அறுத்திடும் வரைக்கும்
களைந்திடமாட்டேன்
தாடியென்ருர்த்தவன்—
தங்கத் தமிழன்—
தனிநாடு பெறுவதே
என்னுயிர்க்கொள்கை
என்று முழங்கியோன்!
தமிழர் மண்ணும்
தமிழ்ஈழநாட்டை
கிழக்கு வடக்கென
கீழறுப்போரை
எதிர்த்து நின்ற
எரிமலை அன்னேன்!
வீராவேசம்
கொண்டு எழுந்து
சூருவளியாய்
சுதந்திர முழக்கம்
எழுப்பிய வீரன்
இயக்கத் தென்றல்!
போலித் தனத்தை
பொய்மனத்தோரை
வேஷம் போட்டிடும்
வீணர் தம்மை
சாடுதற்கு
என்றும் தயங்கான்!
அரியநாயகன்
அறப்போரணியின்
இனிய தலைவன்
என்றும் என் மீது
தூய்மையான
அன்பைபொழிந்தோன்!
'காசி'யின் மீது
மாசற்ற அன்பன்!
அன்னவன் பிரிந்து
ஆண்டுகள் மூன்று
மின்னல் போல்
மறைந்தது!
என்னிவண்
செய்வோம்?
பொன்னெளிர் ஈழம்
புதிதாய் பிறந்திட
அன்னவன் வழிதனில்
அயராதுழைக்குவம்!
பொய்மையாளரை
புறமொதுக்கி
புனிதப் போரை
நடத்துவம்!
இன்னதே அன்னேர்க்கு
நாம் செய்கின்ற
கைம்மாறு!
அரியநாயகன்
சமாதிதொழுது
ஆணையிட்டு
உறுதியெடுப்போம்!

—கோவை

● 12-9-76 நினைவு தினம்.

# இந்திய விடுதலை வீரர்

# சந்திரசேகர் ஆஸாத்!

**இந்தியத் திருநாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் தம்மைத்தாமே அர்ப்பணித்த வீரஇளைஞர்கள் ஏராள மானேர். அவர்களில் ஒருவர்தான் புரட்சி வீரர் சந்திரசேகர் ஆஸாத. அவரது வீர வரலாறு இது!**

**ஒரு** காரியத்தைச் சாதிக்க சாமம், தானம், பேதம், தண்டம் என்ற நான்கு முறைகள் உண்டு. முதல் மூன்று முறைகள் பலனளிக்கவில்லை என்ருல்தான் 'தண்ட' முறையை உபயோகிப்பது வழக்கம். ஆனுல் அன்றிருந்த அரசியல் கொந்தளிப்பில் துடிப்புள்ள இளைஞர்கள் "மயிலே மயிலே இறகு போடு என்ருல் போடுமா? வேண்டும் என்ருல் பிடித்திழுக்கவேண்டும்" என்ற மனப்பான்மையில் இருந்தனா. அவர்களைச் சொல்வதிலும் தவறில்லை.

1919-ல் நடைபெற்ற ஜலியான்வாலா பாக் கொடுமை எல்லோர் மனத்திலும் தீவிர தேச பக்தியை உண்டாக்கியிருந்தது. கவியரசர் தாகூர் தன் 'ஸர்' பட்டத்தை பிரிட்டிஷ் அரசின் முகத்தில் வீசி எறிந்தார். "இன்னும்தோட்டாக்கள் இல்லை, இருந்தால் சுட்டிருப்பேன்" என்ற பிரிட்டிஷ் வெறியன் ஓடயரின் அகம்பாவ ஆணவப்பேச்சு இளம் உள்ளங்களில் பெரும் குமுறலை ஏற்படுததியிருந்தது.

இதைத்தொடர்ந்து மாபெரும் தலைவரான லாலா லாஜ் பத் ராய் தடியால் அடிக்கப்பட்டு 1921 நவம்பர் 17-ஆம் தேதி காலமானர். இந்தக் கொடுமைக்கு எப்படியும் பழி வாங்குவதென்று சில இளைஞர்கள் சமயம் பார்த்திருந்தனர்.

இம்மாதிரி எரிமலையாகப் பொங்கிக் கொண்டிருந்தவர்களில் முக்கியமானவர்கள் பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் பாதுகேசுவர் தத், விஜயகுமார் சின்ஹா, சிவவர்மா, யஷ்பால், ஜய்தேவ் கபூர் முதலியவாகள். இவர்களுக்கெல்லாம்தலைவர் தான் சந்திரசேகர் ஆஸாத். தலைவர் என்ருல் இவர்களை எல்லாம்விட வயதில் பெரியவர் என்று அர்த்தமில்லை. இவர் பிறந்தது 1906 ஜூலை 23-ம் தேதியன்று மத்தியப் பிரதேஷின் அலி ராஜ்பூர் என்ற இடத்தில் இவர் தந்தை சீதாராம் திவாரி தோட்டவேலை செய்து வந்தவர். வறுமையில் வாடிய குடும்பம்.

சிறு வயதில் பில் மலைவாசிகளின் குழந்தைகளுடன் விளையாடிய சந்திரசேகருக்கு அந்த விளையாட்டுகளிலும் தலைமைப் பதவிதான். இவருடன் பிறந்த மற்ற குழந்தைகள் எல்லாம் இறந்து போகவே, "ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு" என்று தாயாருக்கு இவர் மிகச்செல்லம். தகப்பஞர் ஒரு நாள் இவரைக் கடிந்து கொள்ளவே அது பொறுக்காமல் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்.

காசியில் புரட்சியில் ஈடுபட்டிருந்த சிலநண்பர்களின் தோழமை கிடைத்தது. ராம் பிரசாத் பிஸ்மில் என்பவர், 'தேசம் அடிமைப்பட்டு இந்தியத் தலைவர்கள் அவமதிக்கப்பட்டு வரும்போது புரட்சியில் இறங்கி உயிரை தேசத்திற்கு அர்ப்பணம் செய்யவேண்டும்' என்ற விதையை இவர் மனத்தில் ஊன்றினர்.

ஏகப்பட்ட கட்டுக்காவலுடன் கூடிய பொலிஸ் ஸ்டேஷன் முன்பு ஒரு முக்கியமான சுவரொட்டியை ஒட்ட வேண்டும் என்று திட்டம் போடப்பட்டது. யாரும் இந்த ஆபத்தான செயலைச் செய்ய முன்வரவில்லை. சந்திரசேகர் பசையொட்டிய போஸ்டரை உட்புறமும் மறுபுறமும் மட்டும் பசை தடவித் தன் சட்டையில் பதித்துக் கொண்டார். பின்னர் அந்த பொலிஸ் நிலையத்திற்குச்சென்று அங்கு காவலில் இருந்த பொலிஸ்காரருடன் சுவற்றில் முதுகைத் தேய்த்தபடி பேசிக்கொண்டிருந்து வந்துவிட்டார். போஸ்டர் பொலிஸ் நிலையத்திலேயே ஒட்டப்பட்டுவிட்டது.

ஒருசமயம் இவர் அகப்பட்டுக்கொண்டு கைது செய்யப்பட்டார். கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டபோது மாஜிஸ்ட்ரேட் உன் பெயர் என்ன?" என்று கேட்டார். "ஆஸாத்" என்று பதில் வந்தது. ('ஆஸாத்' என்ருல் 'சுதந்திரமான' என்று அர்த்தம்)

கோர்ட் இவருக்கு 12 பிரம்படி தண்டனை அளித்தது. ஒவ்வொரு அடி விழும் போதும்"மகாத்மாகாந்திக்கு ஜே!" "பாரத மாதாவுக்கு ஜே!" என்ற கோஷம் அவா வாயினின்றும் கிளம்பியது. இவர் தீரத்தைக்கண்டு காசி மக்கள் இவரைக் கௌரவித்துக்கொண்டாடினர்கள்.

மன்மத நாத் குப்தா என்பவர் 'ஹிந்துஸ்தான் ரிபப்ளிகன் அசோசியேஷன்' என்ற ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். புரட்சிகர திட்டங்கள் உருவானதெல்லாம் அப்போது இச்சங்க ஆதரவில்தான். காகோரி செல்லும் ரயிலில் பிரிட்டிஷ் அரசாங்க கஜானு பணம் செல்வது வழக்கம் என்றும் அதை எப்படியாவது கொள்ளை அடிக்கவேண்டும் என்றும் திட்டம் தீட்டப்பட்டது. ராம் பிரசாத பிஸ்மில் தான் இத்திட்டத்தின் தலைவர். போட்ட திட்டபடி பணம் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. சந்திரசேகர் ஆஸாத் இதில் சம்பந்தப்பட்டவர் என்பது எப்படியோ வெளியாகிவிட்டது. ஆனுல் அதிகாரிகள் என்ன முயன்றும் இவரைப் பிடிக்கவே முடியவில்லை.

அரசாங்கம் "சந்திரசேகர் ஆஸாதை உயிருடனேயோ அல்லது பிணமாகவோ ஒப்படைப்பவர்களுக்கு ரூ 1000 இனாம்" என்று விளம்பரப் படுத்தியது.

பகத்சிங் போன்றதோழர்கள் "நீ மாட்டிக்கொள்ளப் போகிருய்! ஜாக்கிரதை!" என்று எச்சரிப்பார்கள்.

'இந்த 'பாம்டுல் புகாரா' என் கையில் இருக்கின்ற வரையில் அதுதான் நடக்காது" என்பார் ஆஸாத். (அவர் 'பாம்டுல் புகாரா' என்று குறிப்பிட்டது அவர் கையிலிருந்த சுழல் துப்பாக்கியைத்தான்.) "என்ன நேர்ந்துவிடப் போகிறது! இந்த உயிர்தானே போகும், போகட்டுமே" என்ற அசாத்திய தைரியம்,

கடைசியில் கைதுசெய்யப்பட்டார். ஆனுல் எப்படியோ தப்பி விட்டார். ஜான்ஸிக்கும், ஓர்ச்சா என்ற இடத்திற்குமிடையே ஸத்தார் நதிக்கரையில் ஓர் ஆசிரமம் அமைத்து 'ஹரி சங்கர் பிரம்மச்சாரி' என்ற தபோநிதியாக பல நாட்கள் கடத்தினர்.

இச்சமயத்தில் இவரும் பகத்சிங்கும் சேர்ந்து "ஹிந்துஸ்தான் சோஷலிஸ்டு ரிடப்ளிகன் ஆர்மி" என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். லாலா லாஜ்பத ராயைத் தடியால் அடித்த பொலிஸ் சார்ஜண்ட் ஸாண்டர்ஸைத் தீர்த்துக்கட்டுவது என்பது இந்த ஸ்தாபனத்தின் முதல் லட்சியம். அதன்படியே லாஹோர் பொலிஸ் நிலையத்துக்கருகில் ஸாண்டர்ஸ் தீர்த்துக்கட்டப்பட்டார். சுட்டவர் ராஜகுரு. ஆனுல் சந்திரசேகர் ஆஸாதின திறமையில் யாரும் பிடிபடாமல் தப்பிவிட்டனர்.

மறுநாள் இந்தப் பொலிஸ் அதிகாரி சுடப்பட்டதன் காரணத்தை விளக்கி லாஹோர் நகரமெங்கும் சுவரொட்டிகள் காணப்பட்டன. இதை எழுதியவர் ஆஸாத்தான்.

"சோடிக்கணக்கான இந்திய மக்களின் இணையில்லாத தலைவர் லாஜ்பத் ராயை ஒரு சாதாரண வெள்ளைக்காரப் பொலிஸ் அதிகாரி ஸாண்டர்ஸ் என்பவன் அடித்துக் கொன்றுவிட்டான். பாரதத்திற்கே இது வேதனை தரக்கூடிய சகிக்க முடியாத அவமானம். இக்களங்கத்தைப் போக்குவது யுவ பாரதத்தின் தலையாய தவிர்க்க முடியாத கடமையாகும்.

**"இந்திய மக்கள் விழித்து எழுந்துவிட்டனர். எந்தத் தியாகமும் செய்யத துணிந்துவிட்டனர். ஒருவனைக்கொல்வது குறிதது உண்மையில் நாங்கள் வருந்துகிறேம். ஆனல் அநீதி மிக்க குரூரமான அரசியல் அமைப்பின் பிரதிநிதியாக அவன் விளங்கிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடுங் கோன்மையின் சின்னம் அவன். மனிதனை மனிதன் சுரண்டி வாழும் அமைப்பை அடியோடு அழிப்பதே எங்களது புரட்சியின் திட்டமாகும்."**

அடுத்து இரு புரட்சி திட்டங்கள்: ஒன்று, மத்திய சட்டசபையில் வெடிகுண்டு வீசுவது; இதில் பகத் சிங் சிக்கினர். மற்றது, வைஸ்ராய் வரும் ரயில் வண்டி மீது குண்டு வீசுவது; இதைச் செய்தவர் ராஷ் விஹாரி கோஷ். ஆனுல் அப்போது அவர்தான் குண்டு வீசியவர் என்பதை யாரும் கண்டு பிடிக்கமுடியவில்லை.

நீண்ட காலம் போலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்து வந்த சந்திரசேகர் ஆஸாத் 1931 பிப்ரவரி 27 ஆம் தேதி அலாஹாபாதில் ஆல்ஃபிரட் பார்க்கில் இருந்தபோது பொலிஸார் அவரை வளைத்துக்கொண்டுவிட்டனர். அங்கும் அவர்களுடன் அவர் போரிட்டே வீர மரணம் அடைந்தார். பலரைச் சுட்டு வீழ்த்திய பின் தம் துப்பாக்கியில் மிஞ்சியிருந்த ஒரே தோட்டாவினுல் தம்மையே சுட்டுக்கொண்டு இறந்தார். அவர் விரும்பியபடி பிடிபடாமலே அவர் அமரரானர்.

அப்போது அவருக்கு வயது 25. புரட்சியால்தான் பாரத மாதாவின் அடிமைத் தளை நீங்கும் என்ற அசையாத நம்பிக்கை அவருக்கு இருந்தது. வறுமையில் பிறந்தவர், படிப்பே இல்லாதவர். இருந்தும் தேசத்திற்காக இந்த உடம்பைத் தியாகம் செய்யவேண்டும் என்ற எண்ணமே அவர் மனத்தில் மேலோங்கி நின்றது.

பல இளைஞர்கள் தங்களை விட வயதில் சிறியவரான இவருடைய உத்தரவுக்குப் பணிய எப்போதும் தயாராக இருந்தார்கள்.

அலாஹாபாதில் இவர் அமரரான ஆல்ஃபிரட்பார்க் அருகிலேயே இவருடைய உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை 23ம் தேதி அவருடைய 70-வது ஜன்ம தினம். பாரத அன்னையின் விடுதலைக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அந்த வீரத்தியாகிக்குக் கண்ணீரால் அஞ்சலி செலுத்துவோம்.

(நன்றி: 'திட்டம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## அமிர்தலிங்கம் ...

—1-ம் பக்கத் தொடர்

தது; சட்டபூர்வமற்றது என்ற வாதத்தை தமது தீர்ப்பில் ஆராய்ந்த நீதிபதிகள், அதனைத்தாம் ஏற்றுக்கொள்ள முடியாததற்கான காரணங்களை விவரித்தனர். அரசியற் சட்டம் வளைக்கப் படக்கூடிய தொன்றல்ல; அது முழுமையாக உடைக்கப்படக்கூடியது என்றும் அவர்கள் தமது தீர்ப்பில் ஒரு கட்டத்தில் தெரிவித்தனர். தமிழர் பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தனர்.

இரண்டாவது பகுதியில்—இந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டா இல்லையா என்ற கேள்வியை ஆராய்ந்த நீதிபதிகள், இந்த நீதிமன்றத்தில் அதன் நியாயாதிக்கம்பற்றி கேள்வியெழுப்பக் கூடாதென்றும், அதை வேறோர் நீதிமன்றத்துக்குத்தான் கொண்டு செல்ல முடியும் என்றும் அட்டோனி ஜெனரல் எடுத்துரைத்த வாதத்தை ஏற்க முடியாதென அறிவித்தனர். இதே நீதிமன்றத்தில் அப்பிரச்சினையை எழுப்பமுடியும் என்றனர்.

மூன்ருவதாக — 1972 மே 22ம் திகதி நிறை வேற்றப்பட்ட புதியஅரசியல் சட்டத்தின் 134 (1)134 (2) பிரிவுகளுக்கமைய ஜனுதிபதியினுல் அவசரகாலப் பிரகடனம் செய்யப்பட வில்லையென்றும், ஆகவே ஜனுதிபதியால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள அவசரகாலப் பிரகடனம் சட்டவலுவற்றதுஎன்று தாம் கருதுவதாகவும், அதன் காரணமாக எதிரியான திரு. அமிர்தலிங்கத்தை விசாரிப்பதற்கு தங்களுக்கு அதிகாரம் கிடையாதென்றும் தெரிவித்த நீதிபதிகள், திரு. அமிர்தலிங்கத்தை விடுதலை செய்வதாக அறிவித்தனர்.

தீர்ப்பைக்கேடபதற்கு தந்தை செல்வா கியூ. சி. திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. வி. எஸ். புள்ளைநாயகம், ஆகியோருட்பட ஏராளமான சட்டத்தரணிகளும், தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்களும் சமூகமளித்திருந்தனர். திரு. அமிர்தலிங்கம் சார்பில் வாதாடிய திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி. தற்போது வெளிநாட்டிலிருக்கிருர்.

## பிணையில் இளைஞர்கள் விடுதலை!

மட்டக்களப்பை அடுத்துள்ள மஞ்சத்தொடுவாயில் நடைபெற்றதாக சொல்லப்படும் பஸ் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த செங்கலடியை சேர்ந்த ராஜ்மோகன், மட்டக்களப்பை சேர்ந்த பரமதேவா ஆகிய இளைஞர்கள் மட்டக்களப்பு நீதவானுல் தலா ரூபா 600 சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் சார்பில் நீதிமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின சட்டத்துறை செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து வாதாடினுர். மேல் விசாரணை 17-9-76ல் நடைபெறவிருக்கிறது.

திருகோணமலையில் வைத்து கொழும்பு வரவிருந்த புகைவண்டியை எரிக்க முயன்றதாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இராஜரத்தினம் என்ற இளைஞர் திருகோணமலை நீதவானுல் சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவரது சார்பாக பா. நேமிநாதன் பா. உ. வாதாடினுர். அடுத்த விசாரணை 30-9-76ல் நடைபெறும்.

## இரு இளைஞர்கள் கைது!

தமிழ் இளைஞர் பேரவையின் நல்லூர்த்தொகுதி பிரமுகர் பொன். மதிமுகராசாவும் அளவெட்டியைச்சேர்ந்த 'முல்லை' என்று அழைக்கப்படும் சற்குணராசாவும் பொலிசாரினுல் கடந்த திங்கட்கிழமை (6-9-76) நள்ளிரவு கைது செய்யப்பட்டுள்ளனர். திரு. மதிமுகராசா யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 14.9.76வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## உதவியாளர்கள் தேவை!

தமிழ் சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள இரண்டு ட்ரயல்—அட்—பார் வழக்குகளுக்கும்வேண்டிய ஆவணங்களை தட்டச்சில் பொறிக்கவும் சுருக்கெழுத்தில் எடுக்கவும், தட்டச்சு, சுருக்கெழுத்து தெரிந்த—இலவசமாக உதவக்கூடியவர்கள் உடனடியாக சுதந்திரன் ஆசிரியருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.


செல்லமகால் கடைசி வாரம்

இப்பொழுது காட்சியளிக்கிறது

சிவாஜி மஞ்சுளா, நாகேஷ்
வி. கே. ராமசாமி, தங்கவேலு நடித்த

அன்பே ஆருயிரே

(ஈஸ்ட்மன் கலர்)
திரைக் கதை—டைரக்ஷன் ஏ. சி. திருலோகசந்தர் M. A.

நீகல் (மட்டுநகர்) காட்சியளிக்கிறது

கிறேசி போய்ஸ் ஒவ் த கேம்ஸ்

இப்பொழுது காட்சியளிக்கிறது
கெயிட்டி

ரவிச்சந்திரன், காஞ்சனு, நாகேஷ்,
ரமா பிரபா, மூர்த்தி மற்றும் பலர் நடித்த

ஸ்ரீதர் அளித்த

உத்தரவின்றி உள்ளே வா

கெப்பிட்டல் 6வது வாரம்

ஜெய்சங்கர், பி. பானுமதி, நிர்மலா,
சுந்தரராஜன் மற்றும் பலர் நடித்த-

எடுப்பார் கை பிள்ளை

(ஈஸ்ட்மன் கலர்)

பிளாசா 5வது வாரம்

சிவாஜி கே. ஆர். விஜயா
ஸ்ரீகாந்த், பிரமிளா, வி.கே.ராமசாமி,
— நடித்த —

தங்கப் பதக்கம்

(ஈஸ்மன் கலர்)

கிங்ஸ்லி—லிடோ 17-ம் திகதி முதல்
(கொழும்பு) (யாழ்நகர்)
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா மேஜர் சுந்தரராஜன்,
முத்துராமன், மஞ்சுளா மற்றும் பலர் நடித்த-

அவன்தான் மனிதன்

(ஈஸ்ட்மென் கலர்)
திரைக்கதை டைரக்ஷன் — A. C. திருலோகச்சந்தர் M. A.

வெலிங்டன் 5வது வாரம்
(யாழ்நகர்)
சிவகுமார் ஜெயசித்ரா நடித்த

தங்கத்திலே வைரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976-ம் வருடம் செப்டம்பர் மாதம் 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.